**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிகாமம் மேற்கு பிரதேச சபை நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.4 நிகழத்தக்க பொறுப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெளிப்படுத்தல் உறுதிக்கு கட்டட அனுமதி வழங்காமை தொடர்பாக சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் 2018 மே 23 ஆம் திகதியிலிருந்து 2385/18 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | குறிப்பிட்ட சில தரப்பினரால் பிரதேச சபைக்கென வழங்கப்பட்ட காணி தொடர்பாக சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் 2018 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து 51/13 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |
| **(இ)** | மீன் சந்தைக் காணிக் குத்தகை தொடர்பாக சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதியிலிருந்து காணி/02/2015 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |
| **(ஈ)** | மிருக பலியிடலுக்கு எதிராக சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் 2017 திசெம்பர் 12 ஆம் திகதியிலிருந்து 171/2017 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |
| **(உ)** | மீன் சந்தைக் காணிக் குத்தகை தொடர்பாக சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் 2018 பெப்ரவரி 22 ஆம் திகதியிலிருந்து காணி/373/2018 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |

### 1.5 இணக்கமின்மைகள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய | அறிக்கை தயாரிக்கப்பட்ட போதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உப பிரிவு 16 (2) | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக இணைக்கப்படவில்லை. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158 (1) | ரூபா 42,615,065 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் நிலுவைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பற்றாணைச்சீட்டு வழங்கப்படும். |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் III இன் பிரிவு 32<br>அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடப்பாண்டு தொடக்கம் இறுதிக் கணக்கறிக்கையுடன் இணைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 571 | ரூபா 1,237,247 பெறுமதியான இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரியவர்களுக்கு கடிதங்களும், நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,743,374 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பானமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்ரூபா 25,785,467 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,339,672 | - | 9,455,490 | 9,945,885 | 2,186,955 | - | 2,260,298 | 5,338,480 |
| வாடகைகள் | 11,253,600 | - | 52,024,138 | 11,733 | 12,719,392 | - | 10,924,286 | 22,473 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,852,500 | - | 2,006,506 | 24,000 | 1,820,000 | - | 1,882,427 | 15,500 |
| ஏனைய வருமானம் | 67,434,237 | - | 80,453,581 | 32,799,789 | 6,999,772 | - | 70,322,151 | 69,474,679 |
| | **89,880,009** | **-** | **143,939,715** | **42,781,407** | **84,726,119** | **-** | **85,389,162** | **74,851,132** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால்கடந்த 5 வருடங்களாக வருமானம் பட்டியலிடப்பட்டிருக்காமையானது வருமான சேகரிப்பின் வினைத்திறனின்மையை வெளிப்படுத்துகின்றது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | இனி வருங்காலங்களில் வருமானமானது பட்டியலிடப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரி

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வீதவரி நிலுவை ரூபா 42,615,065 பெறுமதியினை அறவிட நடவடிக்கைகள் | நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் | நிலுவைகள் அறவிடப்பட்டுவருகின்றது. |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (ஆ) மீளாய்வாண்டில் தண்ணீர் வரி நிலுவை ரூபா 294,430 பெறுமதியினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடப்பாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 14,000 பெறுமதியான வியாபார அனுமதிப்பத்திரங்களிற்கான நிலுவையினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,321,786 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 29,830,508 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளையும் முத்திரைக் கட்டண நிலுவைகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்கப்பெற்றதும் உரியகணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உபவிதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருந்தன. | அனைத்து விடயங்களிற்கும் உபவிதிகள் உருவாக்கப்பட வேண்டும். | மிகுதி உப விதிகளும் நடப்பாண்டில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | அனைத்து செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நடப்பாண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலம் மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 507,372 செலவினம் ஏற்பட்டபோதும் சபையின் வருமானமாக ரூபா 259,900 பெறப்பட்டிருந்தது. | வருமானங்களை அதிகரிக்கவும் செலவினங்களைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (iii) திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் தீ முட்டி எரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | தேசிய கொள்கைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நிதிஏற்பாடு கிடைக்கப்பெற்றதும் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையினால் ரூபா 86,226,540 பெறுமதியான நிதியினை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி தேவைக்கு பயன்படுத்தாமல் நிலையான வைப்பாக பேணப்பட்டு வருகின்றது. | நிதியினைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடப்பாண்டில் அவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக பெறவேண்டிய ரூபா 2,231,150 பெறுமதியான ஒப்பந்தவேலை தொடர்பான முற்பணங்கள் சபையினால் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் உரிய காலத்தில் சீர்செய்யப்பட வேண்டும். | உள்ராட்சி அமைச்சிடமிருந்து கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதும் முற்பணம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 16 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 608,806 பெறுமதியான 27 கொடுப்பனவுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். | வைப்புகளினை சீர்செய்வதற்கான நடவடிக்கை நடப்பாண்டில் எடுக்கப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) உரித்தாக்கப்படாத ரூபா 22,355,483 பெறுமதியான 47 ஆதனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் உரிமையினை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சபைத் தீர்மானம் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையின் பயன்பாட்டிலுள்ள 03 வாகனங்கள் நாளதுவரை உரிமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை மாற்ற வேண்டும். | உரிமை தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெறாமையால் உரிமைமாற்றம் செய்யமுடியாதுள்ளது. |

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 252-6540 இலக்க பிக்கப் வாகனமும் WPHO – 0557 இலக்க இழுவை நீர்த்தாங்கியும் 04 தொடக்கம் 16 வருடங்களாக பயன்படுத்தப்படாதுள்ளது. | குறிப்பிட்ட வாகனங்கள்தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பிக்கப் வாகனம் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன் இழுவை நீர்த்தாங்கிக்கான உரிமை தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெறாமையால் உரிமைமாற்றம் செய்யமுடியாதுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஆளுக்குரிய வரும்படிகள் பாதகமாகவும் ஏனைய செலவினங்கள் சாதகமாகவும் காணப்படுகின்றன. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் பாதீடானது இயலுமான வரை உண்மைச் செலவினத்துடன் ஒத்திசையும் வகையில் தயாரிக்கப்படும். |